13

# INTEGRAL COACH FACTORY

## PUBLIC RELATIONS

**PRESS CLIPPINGS**

Name of the News Paper : Dinamalar Dated : 14/08/1

Place of Publication :

# ஐ.சி.எப்., 'மினி' தியேட்டர் சுதந்திர தினத்தில் திறப்பு

**– நமது நிருபர் –**

ஐ.சி.எப்., அருங்காட்சியகத்தில், 90 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, 'மினி' தியேட்டர், சுதந்திர தினம் அன்று திறக்கப்பட உள்ளது.

சென்னை, ஐ.சி.எப்., ரயில்வே அருங்காட்சியகத்துக்கு, பார்வையாளர்களின் வருகையை அதிகரிக்க, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, அருங்காட்சியக வளாகத்தில், 90 லட்சம் ரூபாய் செலவில், மினி தியேட்டர் கட்டுமான பணி, ஜனவரியில் துவங்கியது.

நாளை மறுநாள், சுதந்திர தினம் அன்று, இந்த தியேட்டர் திறக்கப்பட உள்ளது.

நவீன தொழில் நுட்பத்தில், 90 இருக்கைகளுடன், இந்த தியேட்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது. எல்.இ.டி., மின் விளக்கு வசதிகள், நவீன திரை வசதியுடன், 'டால்பி சவுண்ட் சிஸ்டமும்' அமைக்கப்பட்டுள்ளன.



■ ஐ.சி.எப்., அருங்காட்சியகத்தில் உள்ள, 'மினி' தியேட்டர்.

இந்த தியேட்டரில், ரயில்வே பாரம்பரியம், அருங்காட்சியகம், புதிய தொழில்நுட்பம் மற்றும் ரயில் நிகழ்ச்சிகள் குறித்த வீடியோ படங்கள், பார்வையாளர்களுக்கு திரையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கலை நிகழ்ச்சிகள், அலுவலக கூட்டங்கள் நடத்த ஏதுவாக, மேடை வசதியும் செய்யப்பட்டு உள்ளது.

**ICF CRM Mini Theatre to be opened on Independence Day**

In the ICF CRM, Mini Theatre that has been constructed at a cost of Rs 90 lacs is slated to be inaugurated on the Independence Day. The ICF Administration is taking various steps to increase the number of visitors to the CRM. As a part of this, a Mini Theatre construction was taken up at CRM premises in January 2018 at a cost of Rs 90 lacs. This Theatre is being inaugurated on the Independence Day. The theatre has state of the art modern audio, video facilities such as dolby sound system and has a capacity to seat 90 persons. The videos on Railway Heritage, CRM, ICF and other Railways will be displayed here. The stage has been constructed in such a way that can enable holding of cultural programs and conferences also.